# சரஸ்வதி நதி

## சாந்திப்பிரியா



சரஸ்வதி நதி குறித்த செய்திகள் பல புராணங்களில் காணப்படுகின்றன. அந்த நதி சரஸ்வதி தேவியின் பெயரால் அமைந்து உள்ளது. சரஸ்வதி நதிக் கரையில் தான் ரிக் வேதத்தின் பல பாகங்களும் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்த புனித நதி 10,000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தனவாம், அந்த ஆற்றின் பக்கத்தில் சரஸ்வதி நகரம் என்று ஒரு நகரம் இருந்ததாகவும், அதில் பலரும் குடியேறி இருந்தார்கள் என்பதாகவும் ரிக்வேதம் கூறுகின்றது. ரிக், யஜூர் மற்றும் அதர்வண வேதங்களில் சரஸ்வதி நதி பற்றி ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. அதை போலவே மனுஸ்மிருதி, மகாபாரதம் மற்றும் பிற புராணங்களிலும் அந்த நதியின் மகிமை கூறப்பட்டு உள்ளன. வலிமை மிக்க சரஸ்வதி நதியின் புராணக் கதை பழங்காலத்திலிருந்தே இந்தியாவில் பரவி வந்துள்ளது. பண்டைக் கால புராணங்களும், வேத நூல்களும் சரஸ்வதி நதியின் மேன்மைக் கூறும் பாடல்களைக் கொண்டுள்ளன. சரஸ்வதி நதிக் கரை மற்றும் அதன் துணை நதிகளின் கரைகளிலும் ஏராளமான வேத பாடசாலைகள் (ரிஷி ஆஸ்ரமங்கள்) அமைந்து இருந்தன என்பதாகவும் பண்டைய கால

இலக்கியங்களில் செய்திகள் உள்ளன. அவை பெரும்பாலும் குரு- சிஷ்ய பரம்பரைகளைக் கொண்ட மையங்களாக, அந்தணர்களின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளன. இமய மலை மீதிருந்து பாய்ந்து வந்த ஆற்றல் மிக்க சரஸ்வதி நதியின் ஒரு பகுதி நீர் கடலுக்குள் சென்று கலந்தனவாம்.

இன்று சரஸ்வதி பூமிக்குள் சென்று நதி மறைந்து விட்டதாகவோ அல்லது வறண்டு விட்டதாகவோ கருதப்படுகின்றது. ஆனால் பூமிக்கு அடியில் கண்களுக்கு தெரியாத வகையில் அந்த சரஸ்வதி நதி போடுவதாகவும், அந்த பூமியின் மேல் தளத்தில்தான் கங்கை நதியும், யமுனை நதியும் ஓடுகின்றன என்றும் ஆன்மீகவாதிகளும் ஆராய்ச்சியாளர்களும் நம்புகின்றனர். சில இடங்களில் மூன்று நதிகளும் ஒன்றுடன் ஒன்று கலந்து அதாவது பூமிக்கு அடியில் ஓடும் சரஸ்வதி நீரின் கிளை நதிகளாக கருதப்படும் பூமிக்கு மேல் தளத்தில் ஓடும் சில நதிகளுடன், ஒரு சில இடத்தில் கங்கை, யமுனை நதிகள் கலந்து ஓடுகின்றன. அந்த இடங்களை திரிவேணி சங்கமம் என்று கூறுகின்றார்கள். சில ஆராய்ச்சியாளர்களின் கூற்றின்படி தார் பாலைவனத்தில் காணப்படும் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வறண்டு, களிமண் மேடு நிறைந்த நதி போன்ற நிலப்பரப்பை காணாமல் போய்விட்ட சரஸ்வதி நதி ஓடிய நிலம் என்பதாக கூறுகின்றார்கள். வேத காலத்துக்குப் பின்னர் சரஸ்வதி நதி திசை திரும்பி, பூமிக்கு அடியில் சென்று மறைந்து போய்விட்டதாக கருதப்பட்டாலும், என்றாவது ஒருநாள் அது மீண்டும் மேல் படுக்கைக்கு வர வாய்ப்பு உள்ளதாகவும் கூறுகின்றார்கள்.

முதலில் சரஸ்வதி நதி மேற்கு ஹரியானாவில் கர்வாலில் உள்ள ஹர்-கி-துன் பனிப்பாறை, இமயமலையில் பந்தர்பஞ்ச் மாசிஃப் மற்றும் யமுனா நதியிலிருந்து உருவாயிற்றாம். யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் இரண்டும் சிறிது தூரத்திற்கு ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக பாய்ந்து ஓடி, தெற்கே இரண்டும் ஒன்றாகி வேத சரஸ்வதி எனும் பெயரில் ஓடிச் சென்றது. என்றும், தற்கால பஞ்சாப், ஹரியானா வழியாக ஓடிய பருவகால ஆறுகள் மற்றும் பாட்டியாலாவிலிருந்து தெற்கே சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சத்ரானா நதி என்பவை துணை நதிகளாக சரஸ்வதி நதியில் இணைந்து ஓடின என்றும் கூறுகின்றார்கள். பின்னர் ராஜஸ்தான் மற்றும் பவல்பூரில் உள்ள ஹக்ரா வழியாக காகர் நதி ஓடிய நீர்பகுதியை பின்பற்றி ஓடி, சிந்து மாகாணத்தில் நாரா வழியாக ரான் ஆஃப் கட்ச் நகரில் சிந்து நதிக்கு இணையாக சரஸ்வதி நதி ஓடியதாம். இப்படியாக வேத காலத்தில் மூன்று வற்றாத மற்றும் ஏராளமான பருவகால நதிகளின் நீரைச் சுமந்து கொண்டு சென்ற சரஸ்வதி நதி ஒரு வலிமையான நதியாக இருந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

அன்றைய ஸரஸ்வதி நகரில் வசித்து வந்த வம்சத்தினரை ஸரஸ்வத் இனத்தவர் என அழைத்தார்கள். ஒரு காலகட்டத்தில் ஸரஸ்வதி நதி வற்றத் துவங்கியதும் அதன் அருகில் வசித்து வந்தவர்கள் வேறு இடத்திற்கு குடி பெயர்ந்து செல்ல

வேண்டியதாகியதாம். அந்த வம்சாவளியினர் கோவா, கேரளா மற்றும் கர்னாடகத்தில் சில இடங்களில் குடியேறி விட்டதாக கூறுகின்றார்கள்.

ஸரஸ்வதி நதியோ மாபெரும் நதிகளான மகாநதி மற்றும் சிந்து நதிகளை விடப் பெரியதாக இருந்ததாம். அது தோன்றிய விதத்தை கூறும் கதை ஒன்று பிரும்மாண்ட புராணத்தில் உள்ளதாம். அதன்படி உலகைப் படைக்க சக்தி தேவி பிரும்மாவைப் படைத்தவுடன் அவர் நெடிய தவத்தில் ஆழ்ந்தார். அப்போது அவருடைய மனதில் மீண்டும் ஒரு மிகப் பெரிய மங்கையின் உருவம் தோன்றித் தோன்றி மறைய அந்த மங்கையிடம் 'நீ யார்'என பிரும்மா கேட்டார். அதற்கு அந்த மங்கையோ, 'நீங்கள்தான் என்னை படைத்திருக்கின்றீர்கள். ஆகவே நான் என்ன செய்ய வேண்டும் எனக் கட்டளை இடுங்கள்' எனக் கேட்க, பிரும்மாவும் 'நீ அனைத்து உலகிலும் பிறக்கும் ஜீவன்களின் நாவில் எழும் ஒலியாகவும், ஜீவ நதியாகவும் பிறந்து, என்னுள்ளும் வசிப்பவளாக மூன்று குணங்களைக் கொண்டு இருக்க வேண்டும்' என ஆணையிட்டாராம். அவர் தனக்கு இட்ட பணியை செவ்வனே செய்ய புமிக்குச் சென்று பெரும் நதியாக மாறி சரஸ்வதி நதி என்ற பெயரில் ஓடத் துவங்கினாள்.

பத்மபுராண சிருஷ்டி காண்டத்தில் காணப்படும் மற்றொரு கதை இது. முன்னொரு காலத்தில் ஊர்வா என்ற முனிவர் வாழ்ந்திருந்தார். அவர் பிருகு முனிவருக்கு சமமான சக்தி கொண்டவர். ஊர்வா முனிவர் ஜமதக்னி மற்றும் பரசுராமருக்கும் உறவினர். ஒரு முறை பிருகு இனத்தவரை ஷத்ரியர்கள் துரத்திக் கொண்டு போய் கொலை செய்த பொழுது கர்பிணியாக இருந்த ஊர்வா முனிவரின் தாயார், ஊர்வா முனிவரின் கருவை தன்னுடைய தொடையில் மறைத்து வைத்துக் கொண்டு ஷத்ரியர்களிடம் இருந்து தப்பி ஓடினார். ஆனால் அவளை துரத்திக் கொண்டு போய் ஷத்ரியர்கள் கொன்று விட்டனர். அப்போது அவளுடைய தொடையில் இருந்து நெருப்புக் கனல்களைக் கக்கியவாறே ஊர்வா முனிவர் வெளி வந்தார். காலப்போக்கில் ஷத்ரியர்களை பூண்டோடு அழிக்க சபதம் செய்து கொண்டார். அதற்காக அவர் கடுத் தவத்தில் அமர்ந்து கொள்ள உலகம் பற்றி எரியத் துவங்கியது. அதனால் கவலையுற்ற தேவர்கள் அவரிடம் சென்று அவரை சமாதானப்படுத்தி, அவர் தலையில் இருந்து நெருப்பைக் கக்கிக் கொண்டு இருந்த பாதவாக்னி என்ற குதிரையின் தலையில் இருந்து வந்த நெருப்பை எப்படி அணைப்பது எனத் திண்டாடினர். அப்போது பிரும்மா சற்றும் தாமதிக்காமல் ஸரஸ்வதியை அழைத்து அந்த குதிரையின் நெருப்புக் கக்கும் தலையை நதியில் சென்று முழுக வைத்து நெருப்பை அணைக்குமாறு ஆணையிட்டார். அதைக் கேட்ட ஸரஸ்வதியும் தன்னுடன் துணைக்கு கங்கை, யமுனை, மனோரமா, காயத்ரி போன்றவர்களை அழைத்துக் கொண்டு ஒரு மகா நதியாக பூமியில் சென்று பாய்ந்து ஓடினாள். பாதவாக்னி என்ற அந்த ஜுவாலையை தேவர்கள் ஒரு குடத்தில் போட்டு எடுத்துப் போய் ஸரஸ்வதி நதியில் கரைக்க உலகம் எரிவது நின்றதாம்.

சரஸ்வதி நதியைக் குறித்த இன்னொரு கதை இது. தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு மானை கொன்று விட்ட பாபத்திற்காக நந்தா என்ற மன்னன் ஸரஸ்வதி நதிக்கரையில் பிறந்து அங்கு சாப விமோசனம் பெற்றதினால் ஸரஸ்வதி நதிக்கு நந்தா என்ற பெயரும் ஏற்பட்டதாம். பண்டைய வேத காலத்தில் ஸரஸ்வதி, சிந்து, விபாசா, ஷதத்ரு, ரவி, சினாப், யமுனா, திரஷத்வாஜி மற்றும் லவனாவதி போன்ற நதிகள் ஓடிக் கொண்டு இருந்தன எனவும் தற்பொழுது அவற்றில் ஸரஸ்வதி, திரஷத்வாஜி மற்றும் லவனாவதி போன்ற நதிகள் மறைந்து போய் விட்டன எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஸரஸ்வதி நதி எங்கே உள்ளது? ஜீவ நதியாக ஓடிக்கொண்டு இருந்த ஸரஸ்வதி நதி சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வற்றி விட்டது என சரித்திர வல்லுனர்கள் கூறுகின்றனர். மகாபாரத ஆராய்சியாளர்களின் கூற்றின்படி அந்த நதி ஏழு பெயர்களில் அகில உலகத்திலும் ஓடிக்கொண்டு இருந்ததாக கருத்துத் தெரிவிக்கின்றனர். அவ்வப்பொழுது ஏற்பட்டு வந்த நில அதிர்வுகள், பூமி நடுக்கம் போன்றவற்றினால் முன்பிருந்த பல நதிகளும் மலைகளும் அழிந்து விட்டதாகவும், நதிகள் பலவும் பாதை மாறி ஓடி வற்றி விட்டதாகவும் அவை எந்த நதிகள் என கண்டு பிடிக்கப்படாமல் போய்விட்டன என்றும் அப்படி அழிந்தவைகளில் ஒன்றுதான் ஸரஸ்வதி நதியும் எனவும் சரித்திர ஆராய்சியாளர்கள் கூறுகின்றனர்.

# River Saraswathi

## Santhipriya



Mythology has many stories on river Saraswathi which is named after Goddess Saraswathi. It is believed that parts of the Rig Veda were written on the banks of river Saraswathi. The Rig Veda tells us that the sacred river Saraswathi originated 10,000 years ago and on the banks of the river existed a town called Saraswathi town. Plenty of references are available about river Saraswathi in the Rig, Yajur and Atharvana Vedas besides Manusmrithi and in Mahabharata which speak of her glory. The legend of the mighty Saraswathi river has been heard from time immemorial. Ancient Hindu scriptures and Vedas scripted thousands of years ago have hymns praising this river which was the life-stream of the people in those period of time. There are enough evidences available in the ancient Indian literature to prove that there were numerous centres of learning (Rishi ashram) on the banks of river Saraswathi and its tributaries. Those learning centres supported by large

number of scholars, mostly Brahmins were based on the doctrine of Teacher (guru)-Disciple (Shisha) relationship. The water from the sacred Saraswathi river was mighty, as it flowed from the Himalayas and entered into the sea.

But today the river is believed to have disappeared and runs underground in invisible manner, over whose land surface river Ganges and river Yamuna flow though they have not met and merged. However in the spiritual world it is believed that even today in few places very small tributary rivers of invisible river Saraswathi flow along with river Ganges and river Yamuna and the confluence of the three rivers are called Triveni Sanghamam. Some of the archaeologists who attempted to track the flow of the river Saraswathi suggest that the 3500 year old Palaeo channel (A deposit of sediment filling the course of an ancient river Saraswathi) in Thar Desert in Rajasthan is indeed the dried up river Saraswathi. With the end of Vedic period, Saraswathi river too dried up, or disappeared without any trace, but new myths on river Saraswathi suggest that the river would again surface over ground at some period of time.

River Sarasvati originated from the Har-ki-dhun glacier in West Garhwal and Bandarpunch massif in the Himalayas along with river Yamuna. In those days when river Saraswathi flew, the two rivers flew parallel for some distance and later joined together, proceeding south in the name of Vedic Saraswathi. More seasonal rivers and rivulets, including river Ghaggar, joined river Saraswathi which followed the course of the present river Ghaggar through modern Punjab, and Haryana. River Sutlej, the Vedic Shatdru, joined the river Saraswathi as a tributary at Shatrana, approximately 25 kilometres south of Patiala. Saraswathi then followed the course of Ghaggar through Rajasthan and Hakra in Bhawalpur before emptying into the Rann of Kutch via Nara in Sindh province parallel to the Indus river. There is no doubt that the then river Saraswathi was a mighty river in the Vedic times and carried the waters of three perennial and numerous seasonal rivers.

Those who lived on the banks of river Saraswathi in those period were known as Saraswaths. Once the river started drying up, they moved to other places and settled. The race of Saraswaths live in Goa, Kerala and in few places in Karnataka.

River Saraswathi was much bigger than Maha Nathi and river Sind. The Brahmanda purana has a story on river Saraswathi. When Sivasakthi (Parabrahman) created the cosmic and asked Lord Brahma to create the universe, he sat on deep meditation. An unknown female kept on appearing and disappearing in his dream. When Lord Brahma asked her who she was, she said that she was the one created by Lord Brahma and sought his directive as to what she should do. Immediately Lord Brahma told her that in that case she should remain as the voice in each one of the individual folk besides run as river for benefit of mankind. Once she got his orders, she went down to the earth to flow as a mighty river.

Another story appear in the Shrishtikand of Padma Purana. A sage by name Urthuva possessing same ascetic power equivalent to Maharishi Brigu lived. He was related to Lord Parasurama and sage Jamadagni. Once when several people belonging to Kshatriya clan chased those belonging to the race of Maharishi Brigu, Sage Urthuva's mother concealed the foetus of Urthuva in her thigh and ran for safety to escape from the wrath of Kshatriyas. But the mad mob chased her and killed her when Sage Urthuva took birth from his mother's thigh and came out like burning fire and took oath that he would destroy the entire Kshatriya clan. In order to achieve the aim, he sat on meditation and the world began to burn in the flame generated by him. A horse named Badavakkini carrying pot of flame ejected out of the head of the Sage and the celestials were worried not knowing how to defuse the flame. Immediately when Lord Brahma asked Goddess Saraswathi to defuse the flame of fire by immersing the pot of fire on horse Badavakkini into her (river), she took along with her rivers Yamuna, Manorama and Gayathri and flew as mighty river in the universe. The celestials carried the pot of fire and immersed into river Saraswathi thus defusing the effect of the fire and the burning of the universe ended.

This is another story on how the river Saraswathi River was came to be also known as river Nanda. Once a King named Nanda was born on the banks of the river Saraswathi out of a curse incurred for mistakenly killed a deer which was feeding her baby. Since the King got the curse revoked on the bank of river Saraswathi, she was named as river Nanda. Researchers say that few rivers such as Saraswathi, Indus, Vipassana, Shatadru, Ravi, Chinap, Yamuna, Trishatwaji and Lavanavati flew during the ancient Vedic period and now out of those rivers Saraswathi, Trishatwaji and Lavanavati have disappeared. Where was the river Saraswathi which flew ten thousand years ago gone? Historians say that the river Saraswathi dried up six

thousand years ago. According to the researchers on Mahabharata, the river flew under seven names all over the world. Historians opine that the Saraswathi River was one of the few rivers which got destroyed or changed their routes to disappear by occasional earthquakes and other natural calamities.